**மாத்தறை பிரதேச சபை**
**மாத்தறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுன் 08 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 ஜுன் 15 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து மாத்தறை பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | முன்னைய ஆண்டு தொடர்பாக அறவிடப்பட வேண்டிய ரூபா 244,957 இற்கான வியாபார வரி மற்றும் அறிவித்தல் பலகைக் கட்டணம் மீளாய்வாண்டிற்கான வருமானம் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டிற்கான இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வேன். |
| (ii) | மீளாய்வாண்டின் போது சபையினால் கட்டட அபிவிருத்தி வேலைகளுக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 3,030,132 தொகையினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | அனைத்து நிலையான சொத்துக்களும் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டிற்கான இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வேன். |
| (iii) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கம்பெரலிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட்டிருந்த 04 நிர்மாண வேலைகளின் மற்றும் சபை நிதியத்திலிருந்து நிறைவேற்றப்பட்டிருந்த இரண்டு நிர்மாண வேலைகள் தொடர்பான ரூபா 1,540,062 தொகைக்காக கடன் கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டிற்கான இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வேன். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | மீளாய்வாண்டின் இறுதி வரை உள்ளூராட்சிச் சேவை ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 1,873,761 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டிற்கான இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வேன். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத் தொகை ரூபா 204,604 தொகைக்கான ஒரு கணக்கு விடயம் தொடர்பான மீதி மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப் பட்டுள்ள மீதிகளிடையே, கூட்டுத்தொகை ரூபா 30,000 இற்கான சமமின்மைகள் காணப்பட்டன. | உரிய மீதி களில் வித்தி யாசங்களை இணக்கஞ் செய்து கணக் குகள் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கூட்டுத்தொகையை பதிவு செய்யும் போது ஏற்பட்டுள்ள தவறொன்று என்பதனால் அதனை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(இ) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை யால் கூட்டுத்தொகை ரூபா 292,195,661 தொகைக்கான 34 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வதற்கு முடியாதிருந்தது. | நிதிக் கூற்றுக் களில் காட்டப் பட்டுள்ள கணக்கு மீதி களை உறுதிப் படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | முறைப் பிரகாரம் நாளது வரை ஆக்கப் பட்டு ஆவணங்கள் பேணப்படுவதற்கு ஆலோசனை வழங்கியுள்ளேன். |

## 1.4 இணக்கமின்மைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மான ங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | (i) விதி 33 | வீதவரி செலுத்துவதை புறக் கணித்துள்ள நபர்கள் தொடர் பான அட்டவணை மற்றும் ஆதனங்களை தடை செய்யும் எழுத்தாணைகளின் அட்டவணை தயாரித்திருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | வீதவரி செலுத்துவதை புறக்கணித்துள்ள நபர்கள் தொடர்பான அட்டவணை மற்றும் ஆதனங்களை தடை செய்யும் எழுத்தாணைகள் அட்டவணை தயாரிக்கப்பட்டு வருகின்றது. |
| | (ii) விதி 193 | பாதீட்டு மற்றும் குறைநிரப்பு அங்கீகரிக்கப்பட்ட செலவு களுடன் செலவு விடயங்களின் உண்மையான செலவுகளை இணக்கஞ் செய்து மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் தொடர்பாக காரணங்களைக் காட்டும் கூற்றொன்று கணக்கு களுடன் சமர்ப்பித்திருக்க வில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் தயாரித்து சமர்ப்பிப்பேன். |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 கொண்ட பொதுநிர்வாகச் சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படுவேன். |
| (இ) | பிரதான செயலாளரின் 2018 மே 22 திகதிய இலக்கம் CSS/03/12/05 கொண்ட சுற்றறிக்கை | பாவனையிலிருந்து அகற்றப் பட்டிருந்த வாகனம் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | குறிப்பிட்ட விடயத்தை எதிர்காலத்தில் மேற்கொள்வேன். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 10,861,639 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 29,052,831 தொகை ஆகக் காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 6,538,000 | 9,525,622 | 9,109,358 | 8,178,917 | 5,490,330 | 6,288,696 | 4,257,985 | 7,762,653 |
| வாடகை | 3,005,100 | 2,275,089 | 1,991,819 | 683,083 | 2,053,100 | 2,279,621 | 2,238,743 | 399,813 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 2,245,100 | 4,824,766 | 4,815,916 | 8,850 | 1,195,100 | 3,189,741 | 3,189,741 | - |
| ஏனைய வருமானங்கள் | 35,642,500 | 19,336.538 | 31,428,738 | 44,687,936 | 21,173,700 | 22,058,212 | 29,565,277 | 56,780,136 |
| மொத்தம் | 47,430,700 | 35,962,015 | 47,345,831 | 53,558,786 | 29,912,230 | 33,816,270 | 39,251,746 | 64,942,602 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| **(அ) வீதவரியும் வரியும்**<br><br>மீளாய்வாண்டிற்கான ஆரம்ப வீதவரி நிலுவை ரூபா 7,746,244 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 4,922,809 தொகை ஆண்டிற்கான சிட்டையிடல் மற்றும் மிகைக் கட்டணத்துடன் ரூபா 12,669,054 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 4,509,396 தொகை ஆகக் காணப்பட்டமையால், வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 8,159,658 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டது. மொத்த அறவீடுகள், ஆரம்ப மீதியில் மற்றும் சிட்டையிடல்களின் 36 சதவீதமாகும். | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நடமாடும் சேவை மற்றும் வெளிக்கள அலுவல்கள் மூலம் நிலுவை வீதவரி சேகரிப்பதற்காக நடவடிக்கை எடுத்துள்ளேன். |
| **(ஆ) ஏக்கர் வரி**<br><br>ஆரம்ப நிலுவை ஏக்கர் வரி மீதி ரூபா 16,409 தொகையாக காணப்பட்ட துடன், ஆண்டிற்கான சிட்டையிடல் (கட்டணம் மற்றும் தண்டப்பணமுடன்) ரூபா 2,931 தொகையாகக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 81 தொகையாகக் காணப்பட்டமையால், வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 19,259 தொகை நிலுவையாகக் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | பதிவேட்டில் காணப்படும் விலாசங்கள் மற்றும் உரிமையாளர்களை சரியாக நாளது வரை ஆக்குவதற்காக கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப் பட்டு தகவல்கள் சரிசெய்யப்பட வேண்டும் என வருமானக் குழு அறிவித்துள்ளது. |

### 2.2.3 ஏனைய வருமானங்கள்

**நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 7,724,570 தொகை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 36,963,366 இற்கான தொகை முத்திரைக் கட்டணம் பெறவேண்டிக் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவை வருமானம் விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் சேதனப் பசளை உற்பத்திக்காக 2013 ஆம் ஆண்டின் பின்னர் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்குவது மறுக்கப்பட்டுள்ளது. | சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். | மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பிக்கப்பட்டிருந்ததுடன் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்குவதற்காக மத்திய சுற்றாடல் அதிகார சபை பரிந்துரைத்துள்ளது. |

### 3.2 முகாமைத்துவ திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சுவர்ணபுர பொதுக் கிணறு நிர்மாணிக்கும் போது சாத்தியக்கூறு அறிக்கையொன்று மற்றும் குடிநீர் தேவைக்காக தகைமையுடையது என்ற தொழில்நுட்ப அறிக்கை ஒன்றும் பெற்றுக்கொள்ளாமல் சபை நிதியத்தில் இருந்து ரூபா 415,814 இற்கான செலவு மேற்கொள்ளப்பட்டு கிணறு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் இக் கிணற்றின் நீர் பாவனைக்கு பொறுத்தமற்ற நிலையில் காணப்பட்டது. | பொறுப்பு சொல்ல வேண்டிய தரப்பினரிடம் செலவினை அறவிடப்பட வேண்டும். | உப்புப்படிவு உடனான நீர் அடங்கியிருந்ததனால் அதனை தவிர்ப்பதற்காக நீர்த்தாக்காத சீமெந்து பயன்படுத்தப்பட்டு புனர்நிர்மானிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான காணி மற்றும் கட்டடங்களுக்காக தயாரிக்கப்பட்டிருந்த ரூபா 38,040 தொகை பெறுமதியான 04 பெயர் பலகைகள் பொறுத்தப்படாமல் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 89,475 தொகை பெறுமதியான 08 அறிவித்தல் பலகைகள் பொறுத்தப்பட்ட இடங்களில் காணப்படவில்லை. | அறிவித்தல் பலகைகள் குறிப்பிட்ட இடங்களில் விரைவாக பொறுத்தப்பட வேண்டும். | தற்போது அந்த 04 பலகைகள் காணிகளில் பொறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| **(அ) ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்** | | |
| 09 வெற்றிடங்களை நிரப்பு வதற்கும், 09 மிகை பதவியணியினை முறைப்படுத்து வதற்கும் மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | பதவியணியின் மிகை பதவிகளை முறைப் படுத்துவதற்கும் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் வேண்டியுள்ளது. | 2020 பெப்ரவரி 07 திகதிய வர்த்தமானியில் பதவி வெற்றிடங்கள் வெளியிடப் பட்டிருந்த போதிலும் ஆட்சேர்ப்பு தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. |
| (ஆ) சபையினால் சுகாதாரத் தொழிலாளர்கள் 06 பேருக்கும் மற்றும் வெளிக்கள வேலை தொழிலாளர்கள் 03 பேருக்கும் உரிய கடமை சாட்டுதல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்காமையால் குறிப்பிட்ட கடமைகளை நிறைவேற்றுவதற்காக அமைய அடிப்படையில் மீண்டும் புதிதாக 03 ஊழியர்கள் சேர்க்கப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் ஜனவரி முதல் அக்தோபர் வரையான காலப்பகுதிக்காக ரூபா 507,680 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | குறிப்பிட்டுள்ளவாறு கடமைகள் சாட்டுதல்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் நாளாந்த கடமையை சாட்டுவதற்காக முறையான நடைமுறையொன்று கடைபிடிக்கப்பட வேண்டும். | தேவையின் மீது மேற்கொள்ளப்பட்டது. |

**3.4 செயற்பாட்டுத் திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) யக்துவ சேதனப் பசளை செயற்களத்தில் காணப்படும் காணியின் பிற்பகுதியில் காணிப்பகுதியொன்றில் கற்றாளைப் பயிர்செய்கைக்கான தரையை தயாரிப்பதற்காக மீளாய்வாண்டு ஜுலை மாதத்தில் ரூபா 360,885 இற்கான செலவொன்று மேற்கொள்ள ப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆக்கபூர்வமான கருமங்களுக்காக பயன்படுத்த வேண்டும். | கற்றாளைப் பயிர்ச்செய்கை தோல்வியடைந்தமையால் கன்றுகளுக்கான பணம் செலுத்துதல் நிறுத்தப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கஹடகஹ வத்த கோல்டன் சிடி காணி துணைப் பகிர்வு செய்யும் போது பொது வசதிகளுக்காக 6.15 பர்சஸ் அளவு காணி குறைவாக பெறப்பட்டிருந்தது. | வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் செயற்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |
| (இ) | 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் 23(ஈ) இன் பிரகாரம் 03 வருட காலத்தை மிகைத்துள்ள 10 நிறுவனங்களின் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் நாளதுவரை ஆக்கப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். | குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 சொத்துக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான 03 ரூட் 35.48 பர்சஸ் அளவான 07 காணிகள் தனியார் தரப்பினரினால் அங்கீகாரம் இன்றி குடியிருந்து ஆதனங்களை அனுபவித்து வருகின்றனர். | அங்கீகாரம் இன்றி வதிவோர்கள் அகற்றப்பட வேண்டும். | அங்கீகாரம் இன்றி காணிகளை பயன்படுத்துவோர் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுப்பேன். |

### 3.5.2 உரித்தாக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் அதிகாரப் பிரதேசத்துக்குரிய 35 பர்சஸ் அளவான 02 காணிகளின் உரிமையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். | உரித்தாக்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பேன். |

### 3.5.3 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| **(அ) காணிகள் மற்றும் கட்டடங்கள்** | | |
| சபைக்குச் சொந்தமான 12 ஏக்கர் 03 ரூட் 1.81 பர்சஸ் அளவான 38 காணிகள் மற்றும் சபைக்குச் சொந்தமான ஹுங்கம்கொட இறங்குதுறை படகு சேவை ஆக்கபூர்வமான கருமத்திற்காக பயன்படுத்தப்படாமல் விளைவற்று காணப்பட்டது. | ஆக்கபூர்வமான கருமத்திற்காக பயன்படுத்த வேண்டும். | ஹுங்கங்கொட இறங்குதுறை படகு சேவை உடைந்து செயற்படாது காணப்படுகின்றமையால் செயற்படுத்த முடியாமல் உள்ளது. அந்த படகு சேவையை மீண்டும் மறுசீரமைப்பதற்காக நடவடிக்கை எடுப்பேன். |
| **(ஆ) மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டிகள்** | | |
| மீளாய்வாண்டு இறுதியளவில் சபைக்குச் சொந்தமான ரூபா 5,600,000 பெறுமதியான 04 வாகனங்கள் பயன்படுத்தப்படாமல் விளைவற்று காணப்பட்டன. | விளைவற்ற சொத்துக்களை பயன்தரு கருமங்களுக்காக ஈடுபடுத்த வேண்டும். | 02 வாகனங்களை ஏல விற்பனையில் விற்பனை செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், 02 வாகனங்கள் சாரதியின்மையால் நிறுத்தப்பட்டுள்ளது. |

### 3.6 பெறுகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபைக்குச் சொந்தமான காணி மற்றும் கட்டடங்களுக்காக பெயர் பலகை தயாரிப்பதற்காக கிராம அபிவிருத்தி சங்கம் ஒன்றிற்கு மீளாய்வாண்டின் போது ரூபா 776,466 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் குறிப்பிட்டுள்ளவாறு பெறுகை செயல்முறை கடைபிடிக்கப்பட்டிருக்காமையால் 02 அறிவித்தல் பலகைகள் பொறுத்துவதற்காக ரூபா 213,070 தொகை மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. | மிகையாக செலுத்துப்பட்ட தொகை மீண்டும் அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் இவ்வாறான நிலை ஏற்படாதவாறு பொறுப்பாக இருப்பேன். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிதிப்பிரமாணம் 134 இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டம் தயாரிக்கும் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதியுடன் கலந்துரையாடி இணக்கத்தை பெற்றிருக்காததுடன் உள்ளகக் கணக்காய்வு அறிக்கையின் பிரதிகள் சமர்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உரிய ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்விற்கு அனுப்புவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |